**கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், ஜெயங்கொண்டம்.**

முன்னிலை: **திரு.S.கணேஷ், எம்.காம்., எம்.எல்.,**
கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி,
ஜெயங்கொண்டம்

**2024 ஆம் ஆண்டு ஜூலை திங்கள் 05 ஆம் நாள் வெள்ளிக்கிழமை**
**அசல் வழக்கு எண் – 236/2019**
**CNR No:TNAL050003492019**

ராஜேந்திரன், – வாதி

/எதிர்/

1. நடராஜன்,
2. கிருஷ்ணமூர்த்தி,
3. அரியமுத்து. – பிரதிவாதிகள்

தார் ரோடு ஓரமாக இருக்கும் தாவா சொத்தின் வடபுறம் மற்றும் கீழ்புறத்தில் புதிதாக பிரதிவாதிகளும், அவரது ஆட்களும் ஒன்று கூடிக் கொண்டு பாதை எதுவும் ஏற்படுத்தாமல் இருக்க சாசுத இன்ஜங்ஷன் பரிகாரம் கிடைக்கவும், தாவா சொத்தில் பிரதிவாதிகளும், அவரது ஆட்களும் அத்துமீறி பிரவேசிக்காமல் இருக்கவும், வாதியின் நிம்மதியான அனுபோகத்திற்கு எந்தவித இடையூறும் செய்யாமல் இருக்கவும், சாசுத இன்ஜங்ஷன் பரிகாரம் வாதிக்கு கிடைக்கவும், தாவா செலவு தொகை பிரதிவாதிகளிடம் இருந்து வாதிக்கு கிடைக்கவும், இன்னும் கோர்ட்டார் அவர்களுக்கு யுக்தமாக தோன்றுகின்ற இதர பரிகாரங்கள் வாதிக்கு கிடைக்கவும் உத்திரவாக வேணுமாய் வாதி பிரார்த்திக்கிறார்.

இவ்வழக்கானது 05.07.2024 அன்று என் முன்பாக இறுதியாக விசாரணைக்கு வந்ததில், வாதி தரப்பில் வழக்கறிஞர் திரு.N.மணி அவர்கள் வக்காலத்து தாக்கல் செய்திருந்த நிலையில் முன்னிலையாகாமலும், பிரதிவாதிகள் தரப்பில் வழக்கறிஞர் திரு.R.சுரேஷ்குமார் அவர்கள் முன்னிலையாகியும், வழக்கு கோப்பு ஆவணங்களை பரிசீலித்தும், இன்று இந்நீதிமன்றம் பிறப்பிக்கும்...

**தீர்ப்புரை**

வாதி அழைத்து ஆஜர். வாதி தரப்பில் யாரும் ஆஜரில்லை. இன்று இவ்வழக்கு சிறப்பு பட்டியல் விசாரணைக்காக பட்டியலிடப்பட்டிருந்தது. இந்நிலையில் வாதியின் வருகை மிகவும் அவசியமாகிறது. வாதி தனது தரப்பு விசாரணையை தொடங்க முன்வரவில்லை. எனவே, நீதியின் நலன் கருதி இவ்வழக்கு தள்ளுபடி செய்து உத்தரவிடப்படுகிறது.

இவ்வுத்தரவு என்னால் நேரடியாக தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் பிழைத்திருத்தம் செய்யப்பட்டு, 2024–ஆம் ஆண்டு ஜூலை திங்கள் 05–ஆம் நாள் இன்று இந்நீதிமன்றத்தில் என்னால் அவையறிய பகரப்பட்டது.

ஒப்பம்/–திரு.S.கணேஷ்,M.Com., M.L.,
கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி,
ஜெயங்கொண்டம்.

**வாதி தரப்பில் சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள்:**

–இல்லை–

**பிரதிவாதிகள் தரப்பில் சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள்:**

–இல்லை–

ஒப்பம்/–திரு.S.கணேஷ்,M.Com., M.L.,
கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி,
ஜெயங்கொண்டம்.